பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

DUPLICATE

# இந்துசாதனம்.

விரோதி ௵ (1889) ஆவணி மீ ௨௨ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5-00
,, கால்கலம் ரூ. 3-15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோத்காரி ௵ ஐப்பசி மீ ௯௨ (௧௯௨௩ அக்டோபர் ௨௫) வியாழக்கிழமை. { இலக்கம்—௯௧.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

**(Standard Tiles.)**

இவை வேறெக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேய்ப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனைய ஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

**புஷ்டிக்கு கைகண்ட மருந்து.**

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் கிடைக்காதது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**ரசமணி.**

சகல வசியம், தனலாபம், அருள், சித்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து நேராவும், பேய்பிசாசுகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

---

**M. S. MAIDEEN ABDULKADER MARICAR,**
**& Doctor, T. N. SAMIPILLAI & Co.**
**MUHIADEEN MEDICAL HALL,**
**PORTO-NOVO, S. A. Dt.**

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.

சற்று கவனியுங்கள் சற்று கவனியுங்கள்.

இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

## சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும்; இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்கள் அறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய வேசக்குக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நாம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேககாங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டார்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினாங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால்செலவுக்காக ரூ 2ம் முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

[illegible]

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னார்க்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன்.

(Y. 20)

---

**தீபாவளி நெருங்கிவிட்டது.**

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

## சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாகுக்களும், நயம் 120 நெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்கிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் செசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா. கோ. அ. வெ. கு ஒபுளிசெட்டியார் & Co.,
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.

(Q. 44)

---

**காகிநாடா சேலை.**

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

**வெள்ளிக்கெண்டைச்சால்வை.**

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

**சருவஞானோத்தர ஆகமம்.**

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப் பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

---

Telegrams: "APPANNA", BANGALORE CITY

## கெ. தி. அப்பண்ணா ஐ கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

**பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.**

ரூ.அ.பை.

பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0 முதல் ரூபா 3-0-0 வரை.

**கூந்தல் வளருந் தைலம்.**

[illegible] மோஹினி ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0 டஜன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

**ஓட்டோ வாஸனை ஸெண்டுகள்.**

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

**சந்தன சோப்புகள்.**

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

**சந்தன மரத்தூள்.**

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16) (INDIA).

---

உலகெங்கும் புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

**புஷ்டிக்கு கைகண்ட**

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

**பிளேக் மாத்திரை.**

கூரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரிஞு ஐப்பசிமீ 9உ வியாழக்கிழமை.

## சிறுவர்கட்கு எவ்வகைக் கல்வி ஊட்டப்படல்வேண்டுமென்பது.

"வெள்ளம் வருதற்கு முன்னர் அணை கோலிக்கொள்ளல் வேண்டும்" என்பது ஒரு சிறந்த பழமொழியாகும். நமதுநாட்டிலே புதியனவாகப் பல ஆங்கில வித்தியாசாலைகளும் கல்லூரிகளும் உற்பவித்திருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான மாணவர் அதிக பொருள் செலவிட்டு ஆங்கிலம் பயின்று வருகின்றார்கள். ஆங்கிலம் பயிலுதற்கான பள்ளிக்கூட வேதனம் முதலிய செலவுகளே முன்னரிலும் பார்க்க மும்மடங்கு கூடிவிட்டன. அரசினர் நஞ் சிறுவர்கட்குக் கல்வி யூட்டும் விஷயத்திலே சிறிது அலட்சியஞ் செய்கின்றார்கள். ஊரவர்கள் தம் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியை யூட்டுவதில் மிக முயற்சியாக விருக்கின்றனர். இங்குள்ள சிறுவர்களுக்கு அவர்கள் பெற்றார் ஆங்கிலம் பயிற்றுவதும் சிறுவர் பயிலுவதும் யாதாயினும் உத்தியோகம் பார்த்துப் பிழைக்கலாமென்பது பலரறிந்த இரகசியமாகும். நமது நாட்டி லுள்ளவர்கள் அற்பமாகவோ, அதிகமாகவோ, ஆங்கிலம் பயின்று இவ்விலங்கையிலும் சிங்கப்பூர் மலாய்நாடு முதலிய அந்நியதேசங்களிலுஞ் சஞ்சரித்து உத்தியோகம் பார்த்து அதுவாயிலாகப் பொருளீட்டி வந்தார்கள், வருகின்றார்கள்.

ஆனால் இப்பொழுது பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அற்ப கல்வி உடையவர்கள் உத்தியோகம் பெறுதல் அசாத்தியமாய்விட்டது. அதிக கல்வி உடையவர்கட்கும் உத்தியோகம் அரிதாயிருக்கின்றது. எத்தனையோ வாலிபர்கள் அதிக பொருள் செலவிட்டுச் சிரமப்பட்டுப் படித்துவிட்டுச் செய்வதின்னதென்று தெரியாது தியங்குகின்றார்கள். ஒரு உத்தியோகஸ்தானத்திற்கு ஒருவர் வேண்டுமென்று விளம்பரஞ் செய்தால், அதனைப் பெறுதற்கு ஆயிரக் கணக்கானோர் விண்ணப்பஞ் செய்கின்றார்கள். இனி, இந்த வாலிபர்கட்கெளிலோ உத்தியோகம் பார்த்து வயிறு வளர்ப்பதன்றி வேறு எவ்வகையாலும் பிழைத்தல் தெரியாது. இங்ஙனமானாற் காலகதியில் இவர்கள் கதியென்னாதும். இந்த ஆபத்தான நிலையைச் சாமானிய சனங்கள் சிந்திக்கின்றார்களில்லை. அறிவுடையோர் சிலகாலமாக இவ்விஷயத்தைப்பற்றிப் பெரிதுஞ் சிந்தித்துவருகின்றார்கள். ஆனால் அறிவுடையோரும் அதனைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு வாளாவிருப்பதனால் வரும் பயன் யாதுமில்லை. இப்பொழுது இங்குள்ள வித்தியாசாலைகள்வாயிலாக ஊட்டப்படுங் கல்வியில் அதிக பயனில்லையெனக் கண்டமாத்திரத்தே, இக்கல்வி முறையை விடுத்து, பயன் றரக்கூடிய புதிய முறையான கல்வியை வித்தியாசாலைகளிற் காலதாமசமின்றி அனுசரித்தல் வேண்டும். எங்கள் ஜீவியத்திற்கு இன்றியமையாதனவாய உணவு உடை முதலிய பொருட்களை நாங்களே எமது நாட்டில் ஆக்கிக்கொள்ளப் பயின்று கொண்டால் எங்களுக்கு வருங் குறை யாதுமில்லையாம். உணவு உடை முதலியவற்றிற்கு அந்நியரை நம்பியிருந்தால் எக்காலத்தும் எங்களிடத்திற் பஞ்சமும் அடிமைத்திறமுங் குடிகொள்ளுமென்பது நிச்சயம். இங்குள்ள வித்தியாசாலைகளெல்லாவற்றிலும் ஆங்கில தமிழ்க் கல்விகளைப் பயிற்றுவதோடு அமையாது கைத்தொழில் விவசாயம் முதலிய தொழில்களைச் சிறுவர் பயின்றுவருதற்கான வகுப்புகளை ஆரம்பித்தல்வேண்டும். அரசினரும் இதற்குத் துணை புரிதல்வேண்டும். நெற்செய்கை பருத்திச் செய்கை முதலிய கமத்தொழில்களையும், நூல் நூற்றல் வஸ்திரம் நெசவுசெய்தல் முதலிய கைத்தொழில்களையும் நஞ் சிறுவர்கட்கு வித்தியாசாலைகள் வாயிலாகப் பயிற்றுதல் வேண்டும். இங்ஙனஞ் செய்தலே இனிமேல் நமக்கு வாவிருக்கும் பேராபத்தைத் தவிர்த்தற்குச் சிறந்த மார்க்கமாம்.

## கற்றுக்குட்டி வைத்தியரால் வருந் தீமை.

தக்க குருவையடைந்து வழிபட்டு அக்குருவாயிலாக வைத்திய நூல்களைச் சந்தேக விபரீதமறக் கற்று, தன் குருவுடனுமிடமெல்லாஞ் சென்று நோயாளிகளைப் பார்த்து, நோய்கட்கு, குரு உபயோகிக்கும் மருந்துகளின் பேதமறிந்து நாடிமுறை நன்கு கைவந்தபின் குருவுடைய அனுமதி பெற்று வைத்தியஞ் செய்யப் புகுவோனே சிறந்த வைத்தியனாம். இங்ஙனமெல்லாஞ் செய்த பின்னரும் தக்க அனுபவம் வேண்டுமென்பர். தக்க அனுபவத்தோடு பரம்பரை வைத்தியனாயிருத்தல் சிறந்ததென்பர். இவற்றோடு, ஜீவகாருண்ணியம் பொருளாசையின்மைமுதலிய சுகுணங்கள் ஒரு வைத்தியனிடத்தில் அமையுமேல் அவனை அகத்தியனெனலாம். ஆனால் இக்காலத்திலே வைத்திய சாஸ்திர அறிவு எட்டுணையுமின்றிப் பிரபல வைத்தியர்களுக்கு மருந்தரைத்து மூலி தேடிக்கொண்டுவந்து கொடுப்பதையே முயற்சியாகக் கொண்டவர்களும் மருந்தரைத்துவந்தவர்களும் வயிற்று வளர்ப்புக்காக வைத்தியர்களெனப் புறப்பட்டு விடுகின்றார்கள். இவர்கள் தாஞ் செய்யப் புறப்பட்ட கருமம் எத்துணைப் பொறுப்புடைய தென்பதைச் சிறிதுஞ் சிந்திப்பதில்லை. ஒளிர்வதெல்லாம் செம்பொன் என்று எண்ணும் இயல்பு பூண்ட அறிவற்ற ஏழைச் சனங்கள் தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கும் சுற்றமித்திரர்களுக்கும் நோயுற்ற காலத்து இக் கற்றுக்குட்டிகளை யடைந்து, இவர்கள் கேட்ட திரவியத்தைக் கொடுத்து, அரிய உயிரையும் ஒப்பித்துவிடுகின்றார்கள். இக் கற்றுக்குட்டிகள் நாடிபேத மறியாமையினாலும் நோயை இன்னதெனக் கண்டுபிடிக்கும் ஆற்றலில்லாமையினாலும், தம்மிடத்துள்ள ஏதுமொரு மருந்தைக் கொடுத்துவிட்டுப் பணம் பறித்துக் கொள்ளுகிறார்கள். அவ்வளவில் மாத்திரம் அமைந்துவிடுகின்றார்களா? இல்லை! இல்லை!! தக்க வைத்தியர்கட்குந் தோஷங் கற்பிக்கின்றார்கள். இத்தனை நாளையில் இந்நோயை அடியோடு மாற்றி விடுவோமென்றுஞ் சொல்லுகின்றார்கள். இவர்கள் "நோயை அடியோடு மாற்றி விடுவோம்" என்று சொல்வதிலும் ஒரு உண்மையிருக்கின்றது. எங்ஙனமெனில் நோயாளி உயிருடனிருந்தாற்றானே நோயும் அவனைப் பிடித்திருக்க முடியும். நோயாளி இறந்துவிட்டால், இவர்கள் "நாமென்ன செய்வது, நாம் கொடுத்தமருந்துக்குப் பட்டமாமுந்தழைக்குப்; நாமென்ன கடவுளா, விதியை விலக்க முடியுமா" என்று வாக்குச் சாதுரிமாகப் பேசிக்கொள்வார்கள். சென்றவாரம் ஒருவர் எம்மிடம் வந்து தமது பிள்ளைக்கு நோய் கண்டவிடத்து ஒரு வைத்தியர் செய்த அநியாயத்தைச் சொல்லிக் கண்ணீர் விட்டுத் தாம் எழுதிக்கொண்டுவந்த கடிதத்தை இப்பத்திரிகையில் வெளியிடும்படி பரிந்துகேட்டார். அக் கடிதத்தைக் கீழே தருகின்றோம்:—

"எனது 9 வயசுக் குழந்தைக்குச் சிறு காய்ச்சல் உண்டாயிருந்ததனால் ஒரு வைத்தியரைக்கொண்டுமுதலில் வைத்தியஞ் செய்வித்தபோது, அவ்வைத்தியர் நோயையறியாமற் பேதிமருந்துகொடுத்துவிட்டார். நாள் விதம் 8-9 முறை வயிற்றாலே போய்க்கொண்டிருந்தது அதைத் தடுக்கவுமில்லை. இப்படி விட்டதினால் பிள்ளைக்குச் சன்னிநோய் உண்டாய் விட்டது. பிள்ளை தப்புமோ என்ற சந்தேகம் எங்களெல்லோருக்கும் உண்டாயது. பின் திருநெல்வேலியிலிருந்து காலஞ்சென்றுபோன பிரபல வைத்தியர் ஸ்ரீ சண்முகம் என்பவருடைய பேரனும் காலஞ்சென்ற பிரபல வைத்தியர் ஸ்ரீ கனகசபையவர்களின் சகோதரருமாகிய குமரவேலுப் பிள்ளையைக்கொண்டு வைத்தியஞ் செய்வித்தேன் அவருடைய வைத்தியத் திறமையினால் என்குழந்தைக்கு இப்பொழுது நல்ல சுகம் உண்டாயிருக்கிறது. அவர் நோயாளிகளில் உள்ள இரக்கமும் கொடுத்தகாசுக்குத் தக்க மருந்து கொடாது நோய்க்குத்தக்க மருந்து கொடுப்பதும் முதலியகற்குணமும் ஈசுரபத்தி முதலியவும் பொருந்தியுள்ளார் இப்படிப்பட்ட வைத்தியர்களைக் கொண்டு வைத்தியஞ் செய்வித்தல்தான வைத்தியம். கற்றுக்குட்டிகளைக் கொண்டு வைத்தியஞ் செய்வித்தலும் அவர்கள் வைத்தியஞ் செய்தலும் பைத்தியமே என்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. முதலில் வைத்தியஞ் செய்த வைத்தியர் தன்னைவிட்டுமாறி வைத்தியஞ் செய்வித்ததைப்பற்றிக் குறைசொல்லுகிறார். இவர் தனக்குப் பயங்கரப்படக் கூடிய நோய் வந்தகாலத்தில் நோயைச் சுசப்பநித்தாத வைத்தியர்களைக் கொண்டு வைத்தியஞ் செய்விப்பாரா?"

இப்படியெல்லா மிருந்தலால் எவரும் எவ்வகைப்பட்ட நோய்களுக்குந் தக்க வைத்தியர்களைக் கொண்டு மருந்து செய்வித்தல்வேண்டும். இவ்வகையான முறையீடுகள் பல இப்பத்திரிகையில் வெளியிடும்படி இடையிடையே வந்தன. வெளியிடுவதினால் விபரீத விளக்கமுண்டாகுமென வஞ்சி வெளியிடாதொழிந்தோம்.

## உலகம் பலவிதம்.

நமது செந்தமிழ்ப் பாஷைக்கு, தமிழ் மக்களென்றிருப்பவர்கள் பலவகையான இடையூறுகளைச் சிலகாலமாகச் செய்யத் தலைப்பட்டுக் கொண்டனர். புராணங்கள் இதிகாசங்கள் நீதிநூல்கள் முதலியவற்றுட்சிலபாகங்களைப் பள்ளிக்கூடச்சிறுவர் பயிலும் பொருட்டுத் தொகுத்து அச்சிட்டு வெளியிடுஞ் சில பதிப்பாசிரியர்கள், அச் செய்யுட்களிலுள்ள சில வாக்கியங்களைத் தவிர்த்து, அவற்றிற்குப் பதிலாக புள்ளியிட்டு வெளியிடத் தலைப்பட்டுக் கொண்டனர். தென்னிந்தியாவிலுள்ள ஒரு புத்தக வியாபார சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பாலபாடத்தில் 'குன்றினுற் செய்தனைய கொங்கையாய் ஆவின்பால், கன்றினுற் கொள்வர் கறந்து" என்ற வெண்பாவில் "குன்றினுற் செய்தனைய கொங்கையாய்" என்ற பாகத்திற்குப் புள்ளியிட்டு, "...................... ஆவின்பால், கன்றினுற் கொள்வர் கறந்து" என்று செய்யுளைச் சிதைத்து வெளியிட்டிருக்கின்றனர். இவ்வாறு செய்யுட்கடோறும் வாக்கியங்களைத் தவிர்த்துப் புள்ளி யிடுவதினால், போன்னேபோற் போற்றத் தகுந்த முன்னோர்செய்யுட்கள் பெரும் அலங்கோலத்துடன் காணப்படுகின்றன. இந்த வாக்கியங்களைச் சிறுவர் படித்த மாத்திரத்திலே கெட்டுப்போவார்கள் என்பதே இப்பதிப்பாசிரியர்கள் கொண்ட விபரீத விளக்கமாகும். சிலர் இப்படிப்பட்ட வாக்கியங்களை அகற்றி அவற்றிற்குப் பிரதியாகத் தாம் சில நவீனவாக்கியங்களை இயைத்து அச்செய்யுள்கட் கிடையே பெய்து, அங்ஙனம் பெய்த பாகத்தை மாத்திரம் தடித்த அக்கரங்களில் அச்சிடுவித்து வெளியிடுகின்றனர். இவர்கள் செயல், "மருந்து குடிக்கும்போது குரங்கை நினையாதே" என்று நோயாளிக்குப் பத்தியஞ் சொன்ன வைத்தியனுடைய செயலைப் போலவிருக்கின்றது. குரங்கைப்பற்றி வைத்தியன் நோயாளிக்கு ஒன்றுஞ் சொல்லாது விட்டிருப்பின் அவன் மருந்துண்ணும்போது ஒருபோதுங் குரங்கைப் பற்றி நினைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிராது. வைத்தியன் சொன்னமையினாலேயே நோயாளி மருந்துண்ணப் புகும்போது, "ஆம், வைத்தியர் குரங்கை நினைக்க வேண்டாமென்று சொன்னாரல்லவா" என்று குரங்கைப்பற்றி நினைத்துவிடுகின்றான். அவ்வாறே, செய்யுட்களில் இப் புள்ளியிட்டதைக் கண்ட பிள்ளைகள், தமது ஆசிரியரை நோக்கி "ஐயா, இந்தப் புள்ளிகள் ஏன் இடப்பட்டிருக்கின்றன"வென விசாரணைசெய்யத் தலைப்படுகின்றார்கள். ஆசிரியர் பதில் சொல்ல விழிக்கின்றார். அதனாலே பிள்ளைகளுக்கு அதிகசந்தேகமுண்டாக, அவர்கள் புள்ளியீடின்றி முழுச் செய்யுளும் அச்சிட்ட பிரதிகளைத் தேடிப் பெற்றுப் படித்து மறைக்கப்பட்ட பாகத்தை ஊன்றி யோசித்து நன்கு விளங்கிக்கொள்ளுகின்றார்கள். அதன்பின் அப்பாகம் மறைக்கப்பட்ட காரணத்தையும் அறிந்துகொள்ளுகிறார்கள். சுருங்கச் சொல்லுகில் இந்தப் பாகத்தை மறைத்துவிடுவதினாலேயே பிள்ளைகள் இதனைக் கவனமாகப் படிக்கிறார்கள் என்பது துணியப்படும்.

* * *

வேறு சில பதிப்பாசிரியர், செய்யுட்களை, அவை செய்யுளுருவமா யிருக்கும்போதே விளக்க நினைத்துச் சந்திபிரித்து அச்சிட்டுச் செய்யுளின் சந்தத்தைக் கெடுத்துவிடுகின்றார்கள். இன்னுஞ் சில அந்நிய மார்க்கத்துப் பதிப்பாசிரியர்கள் தாம் அச்சிடும் வாக்குண்டாம் நல்வழி நன்னெறி முதலிய நீதி நூல்களிலுள்ள கடவுள்வணக்கச் செய்யுளைத் தவிர்த்துவிட்டு ஏனையவற்றை அச்சிடுகின்றார்கள். இவர்கள் இங்ஙனம் நூலின் அங்கமாகிய கடவுள்வணக்கத்தைத் தவிர்த்தலால் அந்நூலைப் பங்கஞ் செய்துவிடுகின்றனர். ஆனாற் சைவசமயத்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் போன்ற பதிப்பாசிரியர்கள் ஒருபோதும் இங்ஙனஞ் செய்திலர். நன்னூல், நிகண்டு என்னும் இந்நூல்களை அச்சிட்ட சைவ நன்மக்கள், அவற்றின்கணுள்ள அருகக்கடவுள்வணக்கத்தைக் குறிக்குஞ் செய்யுட்களை அச்சிடாதொழிந்தனரல்லர். சைவ மாணவர் அந்நூல்களைப் படிக்கும்போது, அக் கடவுள்வணக்கச் செய்யுட்களை ஓதாதொழிவதுமில்லை. இப்படிப்பட்ட செயல்களெல்லாம் விரிந்த அறிவற்ற நவீன மதத்தினர் செயலாம். அந்நியமதபோதகரும் கதாப்பிரசங்கியாருமாயுள்ள ஒருவர் தாம் பிரசங்கஞ்செய்யும்போது சில தேவாரங்களை எடுத்துத் திரித்துப் பாடிப் பிரசங்கஞ் செய்துவருகின்றனர். தாயுமானசுவாமி பாடலுக்கு விபரீத அர்த்தங் கற்பிக்கின்றனர். இப்படிச் செய்பவர்கள், ஆதியில் அந்நூல்களைத் திருவாய் மலர்ந்தருளிய மகான்களுக்குத் துரோகஞ் செய்பவர்களாவர். இவர்களுக்கு ஆற்றலுண்டேல், தமக்கியைந்த கருத்தமைத்து, அந்த மகான்களுடைய அருட் பாக்கள் போற் பாடிவைத்துப் படித்துக்கொள்வதன்றோ யோக்கியமாகும். பாதிச் சுரைக்காய் விதைக்கும் பாதி கறிக்குமா?

* * *

வேறு சிலர், தமிழ்மொழியோடு ஆங்கிலத்தைக் கலந்து பிரயோகித்தாலும் பாதகமில்லை, ஆரிய மொழிப் பதங்களை விரவவிடவொண்ணுதென்னுங் கொள்கை கொண்டவர்களாய், திருவன், திருவாளன், சொற்பொழிவு தலைப்பு என்னுஞ் சொற்களைப் பிரயோகித்து, இன்றியமையாது தமிழிற் பிரயோகிக்கவேண்டிய முகம், உருத்திராக்கம் முதலிய வடசொற்களுக்குப் பிரதியாகத் திராவிட பதங்களின்மையால், அச்சொற்களை உபயோகிக்கவேண்டி ஏற்படும்போது, ஊமர் சைகை காட்டுமாபோல், கையாலுங் காலாலும் மூக்காலுஞ் சைகை காட்டத் தலைப்பட்டு இடர்ப்படுகின்றனர்.

## சமாசாரம்.

உபந்நியாசம்:—பரமேஸ்வரக்கல்லூரி ஆசிரியராகிய மிஸ்டர் F. சேரர்டன்பியல் அவர்கள், வருகிறதிங்கட்கிழமை மாலை 5 மணிவரையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் "எங்கள் ஈடேற்றத்திற்காகிய வழியென்ன" என்னும் விஷயமாக ஆங்கிலத்தில் உபந்நியாசஞ் செய்வார்.

காரைதீவு இந்துவாலிப சங்கம்:—இச்சங்க புத்தகாலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை சரஸ்வதிபூஜையும்சங்கீதபஜனையும்நடத்தப்பட்டன. பின்னர் இச்சங்கத்தாரால் அதிககாலமாக உத்தேசிக்கப்பட்ட தேவாரவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணி தொடக்கம் இச்சங்கபுத்தகாலயத்தில் நடைபெறும்.

—கடித.

சாவகச்சேரிச் சைவ ஆங்கில வித்தியாசாலை:—யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கிளை வித்தியாசாலைகளிலொன்றாகிய இவ் வித்தியாசாலை, அரசினர் உதவி நன்கொடைப்பணம் பெறும். வித்தியாசாலையாகப் பதிவுசெய்யப்பெற்று விட்டதென்பதை யறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேம். தென்மராட்சிப்பகுதியிற் சைவரால்வைத்து நடத்தப்படும் ஆங்கில வித்தியாசாலை இதுவொன்றேயாதலின் அங்குள்ள சைவாபிமானிகள் இனிமேலாயினும் இவ்வித்தியாசாலையைப் பெரிதும்அபிமானித்து வருவார்களாக.

கலிகாலக் கொடுமை:—அவிசாவலையைச் சேர்ந்த தெய்யபிட்டி யென்னுமிடத்தில் சென்ற ஒருமாசகாலமாக இரவு நாலுமணிதொடக்கம் பகல் எட்டுமணிவரையும் தாங்கத்தகாத பனி பெய்கிறது எட்டு மணிதொடக்கம் ஒன்றரை இரண்டுமணி வரையும் தாங்கத்தகாத வெய்யில் எறிக்கின்றது. இரண்டுமணி தொடக்கம் இரவு ஒன்பது பத்துமணிவரைக்கும் சகிக்கக்கூடாத பெருமழை யிடிமின்னலுடன் வருஷிக்கின்றது தெய்யப்பிட்டியிலுள்ள வியாபாரிகள் தண்ணீர் எப்போது வந்து சாமான்களைக் கொண்டு போய் விடுமோ வென்ற கிலேசத்துடனிருக்கின்றனர் சென்ற செவ்வாய்க்கிழமையன்று நேர்ந்தபெருமழையில் இடி விழுந்த அதிர்ச்சியினால் மல்வாசவா வென்னும் தோட்டத்தில் மாடுமேய்த்த இந்தியகூலி மூக்கன் என்னும் 15 வயதுச் சிறுவன் இறந்தான.

—கடித.

## ஸ்ரீமத் பாஸ்கராசார்யார்.

(சோதிடலாகிரியென்னும் பத்திரிகையிலிருந்து அறுவதித்தது)

ஆன்மகோடிகள் தவஞ்செய்து சுவர்க்காதி புவன போகங்களையும், மோக்ஷசாதனங்களையும் பெற்றுய்தற்குரிய கருமபூமி யென்று சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களால் புகழ்ந்து போற்றப்பட்டதும் இப்பூமியிலுள்ள மற்றெல்லாக் கண்டங்களிலும் காணப்படாத அநேக அரிய புண்ணிய தீர்த்தங்கள், நதிகள், மலைகள், ஆலயங்களுடன் பொன்னுலக மென்னப் பொலிந்திலங்குவதும், மனுநீதி தவறாது செங்கோல் நடாத்திய மன்னர்கள், வள்ளல்கள், ரிஷிகள், மகரிஷிகள், முதலியோர்கள் வசித்த, வசிக்கின்ற, வசிக்கும் சிறப்பினையுடையதும் ஆகிய பாரதவருஷத்தில் பரதகண்டத்தில் வடதிசையில் சஹியகுல பர்வதத்திற்குச் சமீபத்தில் பிஜ்ஜலபிடம் என்ற கிராமத்தில், கர்நாடக பிராமண வம்சத்தில் சாண்டில்ய கோத்திரத்தில், மகேஸ்வரசர்மா என்ற ஓர் பிரபல பண்டிதசிரோமணி வசித்திருந்தனர். அவர் வேதம் ஸ்மிருதி முதலிய அநேக விதங்களாகிய வித்தைகளைத்தையுங் கற்றுணர்ந்திருந்தனர். அவருக்கு எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருளின் திருவருட் பெரும் பேற்றால் சாலிவாகனசகஸ்ரு ௧௦௩௬-ல் ஓர் அருந்தவப் புத்திரன் உதித்தனர். இத்திருமகனே நமது தேசத்தின் கௌரவத்தை நிலைநாட்டிய ஸ்ரீமத் பாஸ்கராசாரியர் எனப்படுவர். பிஜ்ஜலபிடம் என்னும் கிராமம் இப்போது பீஜாபூர் என்ற பெயரால் பிரசித்தமாய் வழங்கப்பட்டுவருகின்றது. ஸ்ரீமத் பாஸ்கராசாரியருக்கு அபாரமான புத்தியுண்டு.

அவர் தமது இளமைப் பருவத்திலேயே கல்வியிற் றேர்ச்சியுற்று, சகலகலைகளினும் வல்லுநராயினர். இவருக்குக் கணித சாஸ்திரத்தில் அதிகமான பற்றுதலுண்டு. அவருக்குப்பின் இச்சாஸ்திர உணர்ச்சியில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் நமது நாட்டில் ஒருவருமில்லை. இவர் உதித்திலரேல் நமது கணித சாஸ்திரம் நீர்ப்பூத்த நெருப்பென்ன இருந்த இடந் தெரியாமல் மறைந்துபோயிருக்குமென்பதில் எட்டுணையுஞ் சந்தேகமேயில்லை. இவருடைய அறிவின் ஆற்றலும் புத்தியின் போக்கும் சிந்தையின் சீரும் மனத்தின் மாண்பும் கணிதத்தின் காட்சியும் யாவரே எடுத்தியம்ப வல்லுநர். அவருடைய புத்தியின் திட்ப நுட்ப ஒட்பங்களை மேல்நாட்டில் வியந்து பயந்து புகழ்ந்துகொள்ளாதவரில்லை. உலகமெங்கும் ஒப்பில் புகழ்பெற்ற சித்தாந்த சிரோமணி என்னும் கணிதசாஸ்திரமான தமது ஆக்ம கிரந்தத்தை ௩௬-ம் வயதில் இயற்றியருளினர். இவ்வரிய நூல் பதினெண்சோதிட சித்தாந்தங்களையும் ஆரியபடீயம் பிரம்மகுப்த சித்தாந்தம் முதலியவைகளையும் நன்காராய்ந்து இயற்றியிருப்பதாக நமக்குத்தெரியவருகின்றது. ஆனால் அவைகளிற் காணப்படாத அநேக அரிய பெரியகணித நுட்பங்களைத் தாமே தமது நுண்மதியாலுணர்ந்து செய்திருக்கின்றன ரென்பது நன்கு காணப்படுகின்றது. மிகவும் புத்திமானாகிய ஸ்ரீமத் "லல்லாசாரியர்" என்பவர் தாம் எழுதிய "தீவிருத்தி" என்னும் நூலில் பிராந்த விதியைப்பற்றி விளக்கியிருக்கார். ஸ்ரீமத் பாஸ்கராசாரியர் அந்த நூலுக்கோர் ஒப்பில் விருத்தியுரைசெய்து தன்னுடையசித்தாந்தத்தை நிலைநாட்டிப் பரவச் செய்தனர். பாஸ்கராசாரியருக்குக் கணித சாஸ்திரங்களிலும், காவிய சாஸ்திரங்களிலுஞ் சமமான விற்புத்தியுண்டு. அலைகடலென்ன அகன்று விரிந்து, பரந்துகிடக்கும் கணித சாஸ்திரத்தைத் தாண்டுவதற்குப் புத்தியே சரியான நாவிகம் (கப்பல்) என்பது அவருடைய சிறந்த கொள்கையாகும். அவரால் அருளிச்செய்யப்பட்ட "சித்தாந்தசிரோமணி" என்ற அரிய கிரந்தம் அவருடைய இந்த அபிப்பிராயத்திற்குப் பல திருஷ்டாந்த ரூபமாய் விளங்குகின்றது.

பூமிக்கு ஆகர்ஷிக்கும் (இழுக்கும்) படியான சக்தி இருக்கின்றதென்பதை நியூடன்துரை கண்டுபிடிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே நமது பாஸ்கராசார்யரவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார். இதனை அவர் இயற்றியருளிய சித்தாந்த சிரோமணி, கோளாத்தியாயம், புவன கோசவாசனையைப் பார்த்தால் நன்கு தெரியவரும். கிறிஸ்துசகம் 1700வருஷத்தில் மேல்நாட்டில் கணித சாஸ்திரத்தில் பிரபல திறமையுடையவராயிருந்த "யூலக்" என்பவர் மிகவும் அகோராத்திரம் (பகலிரவு) பரிசிரமம் எடுத்துக்கொண்டு எந்தக் கணிதத்தைத் தெரிந்துகொண்டாரோ, அதையே நமது ஸ்ரீமத். பாஸ்கராசார்யரவர்கள் தமது சித்தாந்த சிரோமணியில் 500 வருடத்தின் முன்னதாகவே எழுதி வைத்திருக்கின்றார். கிறிஸ்துசகம் 1659ல் "லார்ட் பிரவுங்கர்" என்பவர் ஓர் புதிய கணக்கைக் கண்டுபிடித்து தன்னுடைய பாண்டித்தியத்தை நிலைநாட்டினர். அதைக்கூட நமது ஆசார்யரவர்கள் தமது சித்தாந்த சிரோமணியில் அருளிச்செய்திருக்கின்றார். "குட்டக" கணிதம் ஐரோப்பாவில் கிறிஸ்துசகம் 1921வருஷ முதல் ஏற்பட்டது. அதுவும் பிரஸ்னாத்தியாயத்தில் அதற்கு முந்தியே இருக்கப்பட்ட விஷயமேயன்றி நூதன விஷயமல்ல. அங்க கணிதத்தில் ஸ்ரீமத். பாஸ்கராசார்யரவர்கட்கு உண்டாயிருந்த அபரிமிதமான ஞானத்தின் விசேஷத்தை யார்தான் புகழ்ந்து போற்றுமலிருப்பர்! கிறிஸ்துசகம் 12-வது நூற்றுண்டில் கணிதசாஸ்திரம் எவ்வளவு மேன்மையடைந்ததோ, எவ்வளவு அபிவிருத்தி யடைந்ததோ அதை 19-வது நூற்றுண்டில் கணிதசாஸ்திரம் அடைந்திருக்கும் மேன்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 19-வது நூற்றுண்டின் விருத்தி மிகவும் சாதாரணமானதென்றே தெரியப்படுகின்றது. இதனால் நமது பாரத வருஷத்தில் கிறிஸ்துசகம் 1200ல் இருந்த ஆசிரியர் ஸ்ரீமத். பாஸ்கரனரவர்களைவிட மற்றைய தேசங்களிலிருந்த கணித சாஸ்திர முணர்ந்தவர்கள் மேன்மையடைந்தவர்களல்லவென்பது வெள்ளிடைமலைபோல் விளங்காநிற்கும். நமது ஆசாரியரவர்களே மிகச் சிறந்துயர்ந்தவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஸ்ரீமத் பாஸ்கராசாரியருடைய காலம் வரையிலும் அவருக்குச் சமமான புத்திமான்கள் ஒருவருங் கிடையாது.

உலகமெங்கும் போற்றிப் புகழும் சித்தாந்த சிரோமணியென்ற சிறந்த கணித சாஸ்திரம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை முறையே கோளாத்தியாயம், கணிதாத்தியாயம், பீஜகணிதாத்தியாயம், பாடீகணிதாத்தியாயம் என்பவைகளாம். இவற்றுள் பாடீகணிதாத்தியாயம் "லீலாவதி" என்று வழங்கப்படும். ஸ்ரீமத். பாஸ்கராசார்யரவர்களுக்கு ஏகபுத்திரி ஸ்ரீமதி லீலாவதி என்பவர் இருந்தார். அவ்வம்மையாருடைய ஜனன ஜாதககுண்டலியினால் பாலவிதவை தோஷமுண்டாகுமென்பதை அறிந்துணர்ந்த ஆசிரியர் தமதருந் தவச்செல்விக்கு திருமணஞ் செய்விக்கவில்லை. அவ்வம்மையாரும் விவாகஞ் செய்துகொள்ள இச்சிக்காமல் எப்போதும் சாஸ்திரங்களை வாசிப்பதிலும் ஆராய்வதிலுமே கண்ணுங் கருத்துமாய் தெய்வ வழிபாட்டில் சிறந்தவராயிருந்தனர். புத்திரப் பேறு இன்மையால் துக்கமுற்ற நமது ஆசிரியரவர்கட்கு ஏகபுத்திரி பிறந்தும் இங்ஙனம் வைதவ்ப மடைவளென்னும் பெருங் கவலையானது அவ்வம்மையாரின் கல்வி, அறிவு, ஒழுக்கம், பக்திகளைக் கண்டு களித்தலால் நீங்குவதாயிற்று. அதனால் அத்தவப் புத்திரியின் திருநாமம் என்றும் நான்முகமாய் இந்நிலவுலகத்தில் நிலவும்பொருட்டு "லீலாவதி" என்ற பாடீகணிதாத்தியாயத்தைச் செய்தருளினர். சிலர் லீலாவதியே கணிதத்தில் வல்லவளாகித் தன் பெயரால் இயற்றியருளினர் என்பர். சித்தாந்த சிரோமணியில் 2-வது பீஜகணிதாத்தியாயமாகும். சாதாரணமாக கணிதம் இரண்டுவிதமாயிருக்கின்றது. ஒன்று அவ்வியக்தகணிதமும், மற்றொன்று வியக்தகணிதமுமாகும் இவற்றுள் பீஜகணிதம் அவ்வியக்தகணிதமும், லீலாவதி வியக்த கணிதமுமாம். இவ்விரு கணிதத்தில் தேர்ச்சியடைந்தபின்னரே கணிதாத்தியாயத்தைப் படித்தறிதற்கு உணர்ச்சியுண்டாகும். (வரும்).

## இந்திய சமாசாரம்.

### இந்தியாவுக்குச் சுய ஆட்சி ஏன் கொடுக்கப்படவேண்டும்?

காலஞ்சென்ற ஸ்ரீமான் பியர்சன் என்பவர் 1917-ம் வருஷத்தில் எழுதிய கட்டுரையொன்று இதுகாறும் வெளிவராமலிருந்தது. அது இப்பொழுது 'ஜன்ம பூமி' என்ற வாரப் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. அவ்வியாசத்தின் சாரம் வருமாறு:—

இந்தியாவை ஓர் ஆளப்படும் தேசமாக வைத்திருக்க வேண்டுமென்று விரும்புவோர், அது தன்னைத்தானே ஆண்டுகொள்ள இன்னும் தயாராக இல்லையென்றும், ஆதலின் அதற்குச் சுய ஆட்சி கொடுக்கக் கூடாதென்றும் கூறுகின்றனர். ஆனால் இங்ஙனம் கூறுவோர்யார்? இந்தியா இப்பொழுது இருக்கும் நிலைமையிலேயே இருப்பதால், அதனால் அதிக நன்மை அடைவோரே இங்ஙனம் கூறுகின்றனர். ஆதலின் இவர்களுடைய நடுநிலைமையான தீர்ப்பில் நாம் சிறிது சந்தேகங்கொள்ள வேண்டியதாகவே இருக்கிறது. இந்தியா சுய ஆட்சி பெறுதற்குத் தகுதியுடையதாயில்லை யென்ற இந்த வாதத்திற்குச் சில இந்தியர்களும் ஆதரவு கொடுக்கிறார்கள். இங்ஙனம் கூறும் இந்தியர்கள், இப்பொழுதுள்ள அரசாங்கத்திடமிருந்து பட்டம், பதவி முதலியவைகளை எதிர்பார்க்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். யாராவது ஓர் இந்தியர், தம் நாட்டிற்கு உரிமை வேண்டுமென்று வாதாடுவாரானால், அவர் சுயநலத்தைக் கொண்டே இங்ஙனம் கூறுகிறார் என்று சிலர் முடிவுசெய்து விடுகின்றனர். ஆனால், தற்போதைய ஆட்சி முறையினால் வேண்டிய நன்மைகளை யடையும் இந்தியாவுக்குச் சுய ஆட்சி கொடுக்கக்கூடாதென்று கூறுவோரின் சுயநலத்தைவிட, தம்தேயத்திற்குச் சுதந்திரம் வேண்டுமென்று கூறுவோருடைய சுயநலம்போற்றத் தக்கதென்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் உண்மையை அறியவிரும்பும் ஐரோப்பியரின்தொகை பெருகிக்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. இந்தியர் இராஜதந்திரிகளல்லர். ஆதலின் அவர்கள் உண்மையைப்பேச அஞ்சுவதில்லை. இந்தியாவுக்குச் சுயஆட்சி வேண்டுமென்று கூறுவோர் இங்கிலாந்தின் நன்மையை உத்தேசித்தே அங்ஙனம் கூறுகின்றனர் என்பதைநாம் கவனிக்கவேண்டும். இங்ஙனம் கூறுவது எங்ஙனம் பொருந்துமென்று சிலர் கேட்கலாம். ஆனால் ஐலாந்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் அதிருப்தியானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எவ்வளவு பலஹீனமாயிருக்கிற தென்பதைக் கவனிக்கவேண்டும். ஐர்லாந்து ஒருசிறிய தேசம். அதனுடைய அதிருப்தியே இங்கிலாந்தைப் பாதிக்கிறதென்றால், ஆசியாக்கண்டமுழுவதிலும் சம்பந்தம்பெற்றிருக்கும் இந்தியாவில் அதிருப்தி ஏற்பட்டால் உலகத்தையே அது பாதிக்கும் என்பது நாம் கூறாமலே விளங்கும். ஐர்லாந்தின் விஷயத்தை ஒருவாறு முடித்துவிட வேண்டுமென்று பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் கூறுகிறார்கள். அங்ஙனமே இந்தியாவின் விஷயத்தையும் ஒருவாறு முடிவுசெய்தல் மிகவும் அவசியம். இந்தியா, இங்கிலாந்துக்கு மிகவும் தொலையில் இருப்பதால் அதற்கு உடனே சுயராஜ்யம் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தியர்கள் கறுப்பு நிறத்தவர்கள் என்ற காரணத்திற்காகவும் அதற்குச் சுய ஆட்சி கொடுக்கவேண்டும்.

தாங்கள் ஆளப்படும் சாதியாரென்றுஉணரும்படி இந்தியர்கள் நடத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு முறையும் போலிச் சீர்திருத்தங்கள் வழங்கப்படுகின்றன. சுய ஆட்சி கொடுக்கப்பட வேண்டுமென்று இந்தியர்கள் பகிரங்கமாகக் கேட்டுவருகிறார்கள். இந்தியாவுக்குச் சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென்று கூறின பெசண்டம்மையார் பம்பாய் மாகாணத்திற்குள் வரக்கூடாதென்று தடுக்கப்பட்டார். இங்ஙனமே பல இடங்களிலும் அடக்கு முறைகள் உபயோகிக்கப்பட்டன. தங்களுக்குச் சுய ஆட்சி வேண்டுமென்று இந்தியர்கள் கூறுவதால், பிரிட்டிஷ் ஆட்சியினால் உண்டான நன்மைகளை இந்தியர்கள் மறந்து விட்டதாக எவரும் எண்ணக்கூடாது. ஆனால் சுதந்திர உணர்ச்சி உண்டாக்கத் தக்கவிதமாக அவர்கள் பயிற்சி செய்யப்பட்டு வந்ததால், தங்கள் உரிமையை அவர்கள் நாடுகின்றனர். இதில் என்ன தவறு இருக்கிறது? —சுவதந்திரி.

## கடிதம்.

### "தமிழ்க் கல்வியும் நம் மயக்கமும்"

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர், எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடியிருப்பதுபோல், கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபலவாயிடினும், ஆரியம்போ லுலகவழக்கழிந் தொழிந்துசிதையாஉன், சீரிளமைத்திறம் வியந்து சொல்மறந்து வாழ்த்துதுமே.

பல்லாயிரம் வருடங்கட்குமுன் தொடங்கி வழங்கிவந்த நம்தமிழ் மொழியானது, இப்பொழுது தன் ஒளி மழுங்கிவருவதைக் கண்ணுற்ற அறிவாளிகள் மனமிகவருந்துகின்றனர். சகோதரிகளே, தமிழ்க் கல்வியன்றே நமக்கின்றியமையாத பொருள். எவற்றினும் மேலான மானுடப்பிறவி யெடுத்த ஒவ்வொருவர்க்கும், ஊணும் உடையும் எவ்விதம் இன்றியமையாதவோ, அவ்விதமே தமிழ்க் கல்வியும் நமக்கின்றியமையாதது. இந்நாட்களிலே நாம் தமிழ்நூல்களைக் கையாற் றொடவுங் கூசுகிறோம்.

'அறம் பொருளின் பமும்வீடும் பயக்கும் [ன்
புறங்கடைநல்லிசையுநாட்டும்—உறுங்கவலொ
ன்றுற்றுழியின் கைகொடுக்குங் கல்வியினூங் கில்
சிற்றுயிர்க் குற்ற துணை. [லைச்

ஆதலால் மோட்சத்தை யடைவதற்குக் கல்வி அவசியம் வேண்டும். கல்வி கற்றவுடன் நாம் கல்வி கற்று விட்டோமெனப் பெருமை கொள்ளாது, நாம் கற்ற கல்வி சிறிதென வெண்ணி, மேன்மேலும் அறிவு வரக்கூடிய பல நூல்களையும் வாசித்து நம் அறிவை வளர்த்து வரல் வேண்டும்.

கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

எனத் திருவள்ளுவநாயனார் கூறிய விதம் நாம் நன்றாய்க் கற்று, அறிவை வளர்த்து, எங்கும் நிறைந்து விளங்காநிற்கும் சச்சிதானந்தப் பொருளினது பாதாரவிந்தங்களையடைய முயலல் வேண்டும். அதுவே நமக்கின்றியமையாத பேறு. இவ்விதமிருக்க, இந்நாட்களில், நாம் நம் சொந்தத் தமிழ்க் கல்வியை விடுத்து, ஆங்கிலேயக் கல்வியே, பெருமைதருமென நினைத்துப் பெரிதும் மயங்குகின்றோம். அதனால் வரும் சீர்கேட்டைச் சிறிதும் கவனிக்கின்றோமில்லை. முற்காலத்தில் பெரியோர்கள் தமிழ்மொழியைப் பொன்னேபோல் போற்றி வந்தார்கள். நம்மதி இருந்தவாறென்னே? நம் தமிழ்க்கல்வி நமக்குச்செய்த தீங்குதான்யாது?

தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும் முதலை, யுண்டபாலனை யழைத்ததும் எலும்புபெண்ணுருவாக், கண்டதும் மறைக்கதவினைத்திறந்ததுங் கன்னித், தண்டமிழ்ச்சொலோ மறுபுலச்சொற்களோசாற்றீர்.

என்னுங்கேள்விக்கு விடையாது? என உற்றுநோக்குமிடத்து நம்தமிழ்மொழியே மேன்மேலும் சிறப்புடையதாய் விளங்குகின்றது. அவ்விதம் புராணங்களும், பாடல்களும், அதிவிற்சிறந்த பெரியோர்களும் தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறும்பொழுது நாம் இகழ்வது நீதியாகுமா? இகழ்வதோடு மாத்திரம் விடுகிறோமா? ஒருவருடன் தமிழ்பேசும்படி நேரிட்டால் தமிழையும், ஆங்கிலேயத்தையும் கலந்து பேசித் தமிழ்மொழியை மிகவும் அலங்கோலப்படுத்துகிறோம். இது நமக்கழகா? ஒருவன் தன் அறிவின்மையின் காரணத்தால் 'தமிழிலென்ன இருக்கிறது? தமிழ்க்கல்வியைக்கற்பதினால் வருவாய் வேண்டும். ஆங்கிலேயத்தைக் கற்றால் இராசாங்க உத்தியோகம்பார்க்கலாம்' என நினைத்துத் தமிழ்க்கல்வியை வெறுக்கின்றான். அதற்காக நாமும்;

கானமயிலாடக்கண்டிருந்தவான்கோழி
தானுமதுவாகப்பாவித்துத்-தானுந்தன்
பொல்லாச்சிறகைவிரித்தாடினாற்போலுமே
கல்லாதான்கற்றகவி.

என்பதற்கிணங்க நடந்துவிடுதல் வேண்டுமா?

சகோதரிகளே, இவ்விதங் கூறுவதால், ஆங்கிலேயம் படிப்பது கூடாது என நாம் கூறுகின்றோமென விளங்கிக்கொள்ளாதீர்கள். பல பாஷைகளையும் பயில்வதால் நமக்கு மிகவும் நலமுண்டு. ஆனால் நாம் அப்பாஷைகளைப் பயின்றுகொண்டு, நம் சாதி மார்க்கத்தை அடியோடு விட்டு அந்நிய மார்க்கத்தை அனுசரிக்கின்றோம். அப் பெருங் குறை பற்றியே இவ்விஷயத்தை யெழுதத் துணிந்தேம். அன்றியும் நாம் ஆங்கிலேயத்தைப் பயின்றுகொண்டு, வருகின்றவர்கள் போகின்றவர்கள், ஆங்கிலேயம் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் யாவரிடமும் ஆங்கிலேயம் பேசி, அவர்களுக்கு அப்பாஷை விளங்காவிட்டால், கேலிசெய்கிறோம். வெளிப் பகட்டான ஆங்கிலேயரின் நடையுடை பாவனைகளைநம்பிமோசம்போகின்றோம். ஆண்மக்கள் கூடிப் பிரசங்கம் முதலிய கூட்டங்கள் செய்யுமிடங்களுக்குச் சிறிது கூச்சமுமின்றிச் செல்கின்றோம்.

சகோதரிகளே, இவையெல்லாம் நமக்கழகல்ல. ஆனையுண்ட விளாங்கனிபோல் இவை வெளிப்பகட்டான செயல்களேயன்றி உள்ளீடற்றனவாகும். ஆதலால் நாம் இவற்றையெல்லாம் நம்பிநம்பி இனமும் மோசம்போகாதிருக்கும்படி நித்தியானந்தப் பரம்பொருள் திருவருள்புரிவாராக. இவ்வெளிப்பகட்டான செயல்களெல்லாம், நாமிறக்கும்பொழுது நம்முடன் கூடவரமாட்டா. நாம் செய்யும் பாவபுண்ணியங்களே நம்முடன்வரும்.

நம்மனோர்களால் மிகவுஞ்சிறப்புடையதென வழங்கிவந்து, தற்காலம் தன் சிறப்பு மங்கிக்கிடக்கும் தமிழ்மொழியை முந்திய நிலைமையை யடையும்படி அருள் பாலிக்கும்வண்ணம் எங்கும் நிறைந்து விளங்காநிற்கும் பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
க. நவரத்தினஅம்மாள்,
வண்ணார்பண்ணை.

## மழைத்துளி முத்து.

(ஒருவர்பாடியுதவியது).

1. பதம்பெற முகில்கு ளிர்ந்து பாற்பகம் பஞ்சே யேய்ன
விதம்பெற வுருவாய் வீசுந் தென்றலால் விழிக்கப் பெற்று
மதம்பெறு வேளம் மாய்க்கு வனவரி தாழ்வ மஞ்ச
மிதப்பெறு மின்ன லாலே வீழ்ச்சியை விளக்கு மோர்பால்

2. வற்றிய வாரி யீயும் வள்ளலின் வழியு தித்த
புற்றலை பொருந்து பூணைப் பொதிந்தாத் தினத்தை பொப்பப்
பொற்றலை மருட மன்னன் பொருளெலாம் போதா வென்றே
நற்றலைக் கிரீடம் வாய்ந்த நாகமுந் நாணி நிற்கும்

3. சூரிய கிரணந் தோய்ந்து சுடரொளி வீசு மொன்றே
சீரிய சிலாப முத்தோ செம்மைசேர் பவளந் தானோ
பாரிய மளிகை பண்செய் பளிங்கினை யுருவ மாக்கும்
கூரிய வயிரந் தானோ கொள்வதே துன்றன் நாமம்

4. களங்கமில் மனத்தா ருள்ளக் காட்சியீ தென்பா ருங்கை
விளங்கிய வொளியே வேறு நிறங்களாய் விரிந்த தென்பார்
வளம்பல பொருந்து காவின் மணித்திர ளொலிக்குந் தெய்வ
உளம்பல வருள்பி றக்கு முத்தம சபைதா னென்பார்

5. காலையிற் கரையுங் காக்கை கணக்கிலா வின்ப மெய்தும்
சோலையி லுலாவுஞ் சேவல் சோகமே தீர்ந்து கூவும்
நீலமெல் நிறத்த தோகை நிருத்தமே நிகழ்த்து மென்னில்
சாலவு மானந் தத்தின் சான்றினி வேண்டா வன்றே

6. ஆதியே யவத ரித்தா யடைக்கல மளித்துக் காக்க
நீதியே நிலவி னுயுன் னீழடி யடைந்து வாழப்
பாதியே பாவி நின்றாய் பாரினைப் பரிக்க வென்னில்
சோதிரு ழொளியாள் கூற்றுச் சொலற்கரி தான தொன்றே.

## அபிமானம்.

(முற்றொடர்.)

ஆன்மாக்களிடத்து இயற்கையாயுள்ள அபிமானம் என்னும் இக்குணத்தினாலே சுற்றந் தழாஅல் குடியோம்பல் ஆதியனவெல்லாம் உலகில் நடைபெறுகின்றன. இது ஆன்மாக்களுக்கு இயற்கையாயுள்ள குணமாயிருப்பினும் காலவியல்புக்கும் வினையினியல்புக்குந் தக்கவாறு சிற்சில காலங்களிற் சிற்சில சாதியாரிடத்திலும், தேசத்தாரிடத்திலும், சமயத்தாரிடத்திலும் விசேஷம் பெற்று விளங்குகின்றது. அவ்வாறு சிற்சில வகுப்பாரிடத்தில் விருத்தியுற்று விளங்குங் காலங்களில் அவ்வகுப்பினர் எவ்வகையான இன்னல்களையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது ஊக்கத்துடன் உழைத்துத் தாங்கருதிய விஷயங்களை நிறைவேற்றுகின்றனர். இக்குணம் இயற்கையான குணமாயிருப்பினும் கல்விகேள்விகளான் அறிவு விருத்தியடைவதுபோல அதினுடைய தம்மியத்திற்குத் தக்கவாறு கல்வி கேள்வி சார்பு போதனை முதலியவற்றான் விருத்தியடையுமியல்பினதாயிருக்கின்றது. சிற்க,

நம் தாய் நாடாகிய இந்தியாவிலுள்ளவர்கள் இப்பொழுது சுயபாஷைக் கல்விவிருத்தி விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் தேசாசாரத்தைக் காப்பாற்றும் விஷயத்திலும் இவை போன்ற மற்றைய விஷயங்களிலும் பிரவேசித்துழைத்தலில் அதிகம் ஊக்கமுடையவர்களாயிருக்கின்றனர். அவர்கள் தாம் எத்தொழிலிற் பிரவேசிக்குமிடத்தும் தத்தஞ் சாதி சமயாசாரங்களிற் றிறம்பாது நிற்கின்றனர். அவ்விடத்து ஐரோப்பிய அரசாங்க உத்தியோகத்தர்களாயிருப்பவர்களும் உத்தியோகத்தினிமித்தம் தங்கள் சாதியாசாரம், நடையுடை பாவனையென்னுமிவற்றைக் கைவிட்டதாகக் காணப்படவில்லை. தென்னிந்தியாவில் அந்தணர்கள் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். ஆயினும் அவர்கள் சாதி சமயாசாரங்களிற் றிறம்பாதவர்களாயேயிருக்கின்றனர். அவ்விடத்துக் ஹைக் கோர்ட்டு நீதிபதிகளாயிருப்பவர்கள்தாமும் தம் சாதிக்குரிய உடை நடை பாவனைகளையே அனுசரிக்கின்றனர். அதனால் அவர்களின் மதிப்பிற்குத் தாழ்ச்சி வந்ததாகப் புலப்படவில்லை. ஆனால் இவ்விடத்தோவெனில் அந்தணராதி எச்சாதியினராயினும் தமக்கு அரசாங்கத்தில் ஓர் சிறிய உத்தியோகங் கிடைத்துவிட்டவுடனே தம்முடைய நடை பாவனைகளெல்லாவற்றையும் மாற்றிச் சரீரவியல்பொன்று மொழிய வேனைய இயல்புகளெல்லாம் வெள்ளைக்காரத் தன்மைக்களாகின்றனர். தம் [illegible] உறைகள் தேடி வைத்துக்கொள்ளுகின்றனர் தமிழ்ப் பேசுதலைக் கௌரவக் குறைவென்று எண்ணுகின்றனர். சரீர வியல்பையும் மாற்ற முடியுமானால் மாற்றுமல் விடமாட்டார்கள். என்ன செய்யலாம் கடவுள் சிருட்டித்தபொழுது மாற்றக்கூடிய நிலைமையிற் சிருட்டித்துவிடவில்லையே. நம் நாட்டினரின் அபிமான நிலையிருந்தவாறென்னை?

எம் நாட்டினர் இவ்வாற்றான் அபிமானமற்ற நிலைமையில் இருக்கவேண்டி வந்ததற்குக் காரணம் யாதென வாராய்ந்து பார்க்கில், நம் தாய்ப் பாஷையினை மதித்துப் போற்றுது விடுத்து அந்நிய பாஷையினையே மதித்துப் பேணத் தொடங்கினமையேயா மென்பது எவருக்கும் புலப்படாமற் போகாது. ஆகையினால் நாம் இனிமேலாவது நம் முன்னோரைப்போற் சீர்திருந்தி வரவேண்டுமேயாயின் நம்பாஷையினை இயலக்கூடியவளவு பிரயாசமெடுத்து அபிவிருத்தி செய்தல்வேண்டும். அப்படி அபிவிருத்தி செய்தல் ஒருவர் இருவரால் இயலக்கூடிய காரியமல்ல. எல்லாரும் சேர்ந்தே செய்தல் வேண்டும். அரசினரும் தற்போது நம்பாஷையினை அபிவிருத்திசெய்வதிற் சிரத்தைசெலுத்தே வருகின்றனர். ஆயினும் அரசினரின் சிரத்தையளவில் நம்பாஷை முற்றாய் நன்னிலைக்கு வரமாட்டாது. அரசினர் கல்விவிஷயத்திற் கணக்கு, பூமிசாஸ்திரம், தேசசரித்திரம் ஆதியன பிரதான பாடங்களு ளொவ்வொன்றாக மதிக்கப்படுகின்றன. இவ்வளவிற்கே இலக்கண இலக்கியங்களும் நீதிநூற் பகுப்பும் கவனிக்கப்படுகின்றன.

ஆகையால், நாம் நம்பாஷையினை அபிவிருத்தி செய்யவேண்டுமாயின் அரசினர் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளோடு நின்றுவிடாது உயர்தரக் கல்விச்சாலைகளையும் இடமிடங்கடோறுந் தாபித்து நடத்துதல்வேண்டும். பகலிற் கல்வி கற்க வசதியில்லாத பிள்ளைகள் கற்றற்பொருட்டு இராப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துதல்வேண்டும், அவைகளிற் பிள்ளைகள் வேதனமின்றியே கற்கவொ[illegible]செய்தல் வேண்டும். ஆகிய[illegible]வழி இயலக்கூடியளவு வேதனத்தைக் குறைத்து வறியபிள்ளைகளையும் கற்கும்படிசெய்தல்வேண்டும். அவ்விடங்களிற சமயசாஸ்திரங்களும் இலக்கண இலக்கியங்களும் நீதிநூல்களும் பழையமுறைப்படியே கற்கப்படல்வேண்டும், சனங்கள் பிள்ளைகளை அப்பாடசாலைகட்கனுப்பிக் கற்பித்து ஊக்கப்படுத்திவருதல்வேண்டும். நாட்டிலே இக்கிளர்ச்சியை யெழுப்பிவிடும்பொருட்டு ஆங்காங்கு பிரசாரகர்கள் வேதனங் கொடுத்தாவது நியமிக்கப்படல்வேண்டும். ஒவ்வொரு ஊரிலுமுள்ளவர்கள் சுயபாஷாபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வோர் சங்கத்தை அல்லது வித்தியாசாலையைத் தாபித்து நடத்துதல் வேண்டும். அவற்றை ஆரம்பகாலத்திலேமாத்திரம் முதலில் நடாத்திக் காலஞ்செல்லச்செல்லச் சோரவிடாது ஊக்கத்துடன் வளர்த்தல் வேண்டும். இந்நாட்டில் எத்தனையோ சங்கங்கள், எத்தனையோ வித்தியாசாலைகள், எத்தனையோ சமயப் பத்திரங்கள் காலத்துக்குக்காலம் தொடங்கப்பட்டுக் காலகதியிற் கைவிடப்பட்டன. படுகின்றன. எம்மவரின் அபிமான மிவ்வளவென்பதற்கு இவைகளே போதிய சான்றாகும். வேறு சான்று வேண்டியதில்லை.

நாட்டிலுள்ள சனங்களுள்ளத்திற் பாஷாபிமானம் சமயாபிமானம் முதலியவற்றை உதிக்கச் செய்வதற்குப் பத்திரிகைகளும், போதனைகளும், வித்தியாசாலைகளும் இன்றியமையாதனவாகும். இவற்றை ஒருவர் நடத்த வியலாவழிப் பலர்கூடியேனும் நடத்துதல் வேண்டும். அங்ஙனங் கூடி நடத்துதற்கு அபிமானம் இன்றியமையாக் காரணமாகும். எம்மூரில் வாணவேடிக்கை மேளம் நாட்டியம் முதலிய பிரயோசனமற்ற விஷயங்களில் எவ்வளவு பணம் துராபிமானங் காரணமாகச் செலவிடப்படுகின்றது. கூத்து சர்க்கஸ் முதலிய விநோதக்காட்சிகளின் பொருட்டு எவ்வளவு பணம் செல்கின்றது. இவற்றில் நாலிலொருபங்காவது இவ்வாறான விஷயங்களிற் செலவிடப்பட்டாலோ? படாமைக்குக் காரணம் நம்பாஷையை அலட்சியஞ்செய்தமையானாகிய அறிவுக்குறைவும் அபிமானமின்மையுமேயாம்.

இரக்கமாகிய நம்சகோதரசகோதரிகளே! இப்போதாவது நம் தேயத்தைப் பழைய சீர்திருத்த நிலைக்குக் கொண்டுவரத் தெண்டியுங்கள். [illegible] நடக்குங்கள். நவீன நாகரிகமென்னுந் தெண்ணப் படுவனவெல்லாம் அறிஞர்கட்கருவருப்பைத் தருங்கீழ் நிலைமையின்பாற் பட்டனவேயாகும்.

வீ. நடராசன்,
உபாத்தியாயன்
மீசாலை.

---

### சிதம்பரம் அம்பலவாணசுவாமி சாயரக்ஷக்கட்டளைமடத் தருமபரிபாலன சபை.

இச்சபையின் ஓர் பிரசித்தகூட்டம் 1923ஆ ஐப்பசிமீ 27உ சனிக்கிழமை சாயந்தரம் 6 மணிக்கு,பருத்தித்துறைச் சித்திவிநாயகராலய மண்டபத்தில் கூடப்படும். அத்தருணம் இத்தருமத்தில் அபிமானமுள்ள சகலரையும் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

ஆலோசிக்கப்படும் விஷயங்கள்.

(1) 1923ஆ ஆனிமீ 19உ குறித்த இடத்தில் கூடிய மகாசபையின் வர்த்தமானங்களை வாசித்து அரங்கேற்றிப் பெலப்பித்தல்.

(2) ஷை சபையாரால் நியமிக்கப்பட்ட நிறவ்ரீசபையார் 1922ஆ ஆவணிமீ 12உ கூடச் செய்துகொண்ட பிரமாணங்களையும் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட மானேசரின் நியமனத்தையும் அரங்கேற்றிப் பெலப்படுத்தல்.

(3) ஷை நிறவ்ரீசபையாரில் காலஞ்சென்ற க. குழந்தைவேலு (போஸ்மாஸ்றர்) அவர்களின் இடத்துக்கு ஒருவரை நியமித்தல்.

(4) ஷை நடபடிக்கைகளை அடக்கிய ஓர் ஞாபகப் பத்திர உறுதி நிறைவேற்றுதல்.

(5) இன்னும் அவசியமென்ற சபையிலுள்ளவர்களால் கொண்டுவரப்படும் விஷயங்களையும் ஆலோசித்தல்.

நா. முதலியார் கிருஷ்ணபிள்ளை,
காரியதரிசி.

பருத்தித்துறை,
7—10—23.

(Mis. 402)

---

### ஓர் பிராமணோத்தமர் தேவை.

இலங்கா இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொத்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயுமிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப (துவஜாரோகண)த் துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காரியதரிசி.

(Q. 42)

---

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16.)

---

### "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

---

### உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

#### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீக்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

#### மூலத்திற்கு குருதாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குதக்கல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

#### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

#### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நீற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

#### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி. S. I.

(H. 19).

---

[ESTABLISHED 1909].

### MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடுழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

#### லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் இருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருசிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ருசித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address:
Khader Brothers
Porto-Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

(Y. 19).

---

### விளம்பரம்.

"சாவகச்சேரிச் சந்தைக்குள் இருக்கும் நாலு கிட்டங்கி அறைகளடங்கிய நாலுபரப்பு நிலமும், அச்சந்தையிலிருந்து இரண்டு மைலுக் கப்பால் தனங்களப்பிலிருக்கும் காசிப்பிள்ளை கட்டென்று சொல்லப்படும் 100 பரப்பு வயலும், சாவகச்சேரி சங்கத்தானை இங்கிலீசுப் பள்ளிக்கூடத்துக்குக் கிட்ட ஒரு ஒழுங்கையிலிருக்கும் ஐம்பது பரப்படங்கிய தென்னமரங்களுள்ள ஒரு காணியும் இங் கினிதக்கு 1923ம் ஆ கார்த்திகைமீ முதலாந்திகதி வியாழக்கிழமை பின்னேரம் 4மணிக்கு சாவகச்சேரிச் சந்தைக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் கூறி விற்கப்படும். தேவையானால் இக்காணிகளைப் பிரித்துத் துண்டுகளாகவும் வாங்கிக் கொள்ளலாம். சொல்லப்பட்ட திகதிக்கு முந்தியும் விலை திருந்துமானால் என்னைக் கண்டு ஒழுங்குபண்ணி வாங்கிக்கொள்ளலாம்.

செ. சி. குமாரசாமி,
விரிந்தாவனம்,
கொடிகாமம்.

---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.